பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

04 05 2026 MONDAY 6 30 PM

வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- தமிழக சட்டப்பேரவை தேர்தலில் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. முதன்முறையாக தேர்தலில் போட்டியிட்ட த.வெ.க. தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.
- *த.வெ.க. தலைவர் திரு. விஜய் பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறார்.
- *இந்த தேர்தலில் திமுக மற்றும் அஇஅதிமுக பெரும் பின்னடைவை சந்தித்துள்ளன.
- *திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க.ஸ்டாலின் கொளத்தூர் தொகுதியில் தோல்வியடைந்தார். மாநில அமைச்சர்கள் பலரும் பின்னடைவை சந்தித்துள்ளனர்.
- *அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வெற்றி பெற்றுள்ளார்.
- மேற்குவங்கத்தில் அமோக வெற்றிபெற்றுள்ள பிஜேபி, அஸ்ஸாமில் ஆட்சியை தக்கவைத்துக் கொண்டுள்ளது.
- *புதுச்சேரியிலும் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்றுள்ளது.
- *கேரளத்தில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சியை கைப்பற்றியுள்ளது.

>>>>><<<<<

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத சூழல் உருவாகியுள்ளது.

முதல்முறையாக இந்த தேர்தலில் போட்டியிட்ட த.வெ.க. தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்து, வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

அக்கட்சியின் தலைவர் திரு. விஜய், தாம் போட்டியிட்ட பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளார்.

இந்த தேர்தலில், ஆளும் திமுக பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது.

திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க.ஸ்டாலின் கொளத்தூர் தொகுதியில் தோல்வியடைந்தார்.

அந்த தொகுதியில் த.வெ.க வேட்பாளர் திரு. வி.எஸ். பாபு 8 ஆயிரத்து 795 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார்.

மாநில அமைச்சர்கள் பலரும் பின்னடைவை சந்தித்துள்ளனர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. செல்வப்பெருந்தகை தோல்வியடைந்தார். அந்த தொகுதியில் த.வெ.க. வேட்பாளர் திரு. தென்னரசு வெற்றி பெற்றார்.

234 உறுப்பினர்களை கொண்ட தமிழக சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில், 53 தொகுதிகளுக்கு முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

181 தொகுதிகளில் முன்னணி நிலவரங்கள் தெரியவந்துள்ளன.

த.வெ.க வேட்பாளர் திருமதி. பல்லவி திரு.வி.க. நகர் தொகுதியிலும், திரு. ராம்குமார் அண்ணாநகர் தொகுதியிலும், திரு. வெங்கட்ராமன் மயிலாப்பூர் தொகுதியிலும், திரு. செங்கோட்டையன் கோபிசெட்டிப்பாளையம் தொகுதியிலும், திரு.விக்னேஷ் முசிறியிலும், திரு. விஜய சரவணன் தஞ்சாவூரிலும், திரு. சரவணன் ஸ்ரீவைகுண்டத்திலும், திரு. முருகன் திருநெல்வேலியிலும், திரு. ரெட்டியார்பட்டி நாராணயணன் நாங்குனேரி தொகுதியிலும்,

டாக்டர் சத்திஷ் கிறிஸ்டோர் ராதாபுரம் தொகுதியிலும், திரு. சந்திரசேகர் சேந்தமங்கலம் தொகுதியிலும், திரு. விஜய் பாலாஜி ஈரோடு கிழக்கு தொகுதியிலும், திருமதி. கனிமொழி சந்தோஷ் கவுண்டம்பாளையம் தொகுதியிலும். திரு. மதர் பதுருதீன் மதுரை மத்தி தொகுதியிலும், திரு. பிரகாசம் பூந்தமல்லி தொகுதியிலும், திரு. விஜய் பிரபு மாதவரம் தொகுதியிலும், திரு. விஜய் தாமு ராயபுரம் தொகுதியிலும், திரு. ஆனந்த் தி.நகர் தொகுதியிலும், திரு. ராம்குமார் அண்ணாநகர் தொகுதியிலும், திரு. விஜய் பாலாஜி ஈரோடு கிழக்கு தொகுதியிலும், திரு. முஹமது ஃபர்வாஜ் அறந்தாங்கி தொகுதியிலும், ஜெக்தீஸ்வரி ராஜபாளையம் தொகுதியிலும், திரு. லோகேஷ் தமிழ்செல்வன் ராசிபுரம்

தொகுதியிலும், தமிழ்செல்வி, பவானி சாகர் தொகுதியிலும், மதுரை வடக்கு தொகுதியில் கல்லாணையும் வெற்றிபெற்றுள்ளனர்.

இதைத் தவிர அக்கட்சி. 77 தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளது.

திமுக வேட்பாளர்கள் திரு. சேகர்பாபு துறைமுகம் தொகுதியிலும், திரு. திராவிட மணி கூடலூர் தொகுதியிலும், திரு. ராஜு குன்னூர் தொகுதியிலும், திரு. சுதாகர் வால்பாறை தொகுதியிலும், திரு. ஜெயக்குமார் உடுமலைப்பேட்டை தொகுதியிலும், திரு. கே.என். நேரு திருச்சி-மேற்கு தொகுதியிலும், திரு. அப்துல் வஹாப் பாளையங்கோட்டை தொகுதியிலும், திரு. பூண்டி கலைவாணன் திருவாரூர் தொகுதியிலும், திரு. கதிரவன் மண்ணச்சநல்லூர் தொகுதியிலும் வெற்றி பெற்றுள்ளனர். அக்கட்சி 50 இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி, எடப்பாடி தொகுதியில் 98 ஆயிரத்து 110 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

அக்கட்சியைச் சேர்ந்த பெரும்பாக்கம் திரு. இ.ராஜசேகர் செய்யூர் தொகுதியிலும், டாக்டர் இசக்கி சுப்பையா அம்பாசமுத்திரம் தொகுதியிலும், திரு. ஓ.எஸ் மணியன் வேதாரண்யம் தொகுதியிலும், திரு. காமராஜ் நன்னிலம் தொகுதியிலும், திரு. முக்கூர் சுப்பிரமணியன் செய்யாறு தொகுதியிலும் வெற்றி பெற்றுள்ளனர்.

இத்தொகுதிகளை தவிர, அஇஅதிமுக 37 இடங்களில் முன்னிலை பெற்றுள்ளது.

காங்கிரஸ் வேட்பாளர் திரு. விஸ்வநாதன் மேலூர் தொகுதியில் வெற்றிபெற்றுள்ளார். அக்கட்சியின் வேட்பாளர்கள் 4 தொகுதிகளில் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் திரு. மாரிமுத்து திருத்துறைப்பூண்டி தொகுதியில் வெற்றிபெற்றுள்ளார்.

பிஜேபி வேட்பாளர் திரு. போஜராஜன் உதகமண்டலம் தொகுதியில் வெற்றிபெற்றுள்ளார்.

பாமக 5 தொகுதிகளிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலா 2 தொகுதிகளிலும், இந்திய கம்யூனிஸ்ட், தேமுதிக, வி.சி.க, அமமுக தலா ஒரு தொகுதியிலும் முன்னிலை வகிக்கின்றன.

த.வெ.க முன்னிலை பெற்றுள்ள தொகுதிகளின் விவரங்கள்

கும்மிடிப்பூண்டி, பொன்னேரி, திருவள்ளூர், ஆவடி, மதுரவாயல், அம்பத்தூர், திருவொற்றியூர், ஆர்,கே. நகர், பெரம்பூர், வில்லிவாக்கம், எழும்பூர், ஆயிரம் விளக்கு, விருகம்பாக்கம், சைதாப்பேட்டை, வேளச்சேரி, சோழிங்கநல்லூர், ஆலந்தூர், ஸ்ரீபெரும்புதூர், பல்லாவரம், தாம்பரம், செங்கல்பட்டு, திருப்போரூர், உத்திரமேரூர், காஞ்சிபுரம், அரக்கோணம், காட்பாடி, ராணிப்பேட்டை, வேலூர், கே.வி. குப்பம், குடியாத்தம், திருப்பத்தூர், ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி, பெண்ணாகரம், போளூர், திருக்கோவிலூர், கள்ளக்குறிச்சி, ஏற்காடு, சேலம் மேற்கு, சேலம் வடக்கு, சேலம் தெற்கு, வீரபாண்டி, நாமக்கல், திருச்சேங்கோடு, குமாரப்பாளையம், ஈரோடு மேற்கு, மொடக்குறிச்சி, மேட்டுப்பாளையம், அவினாசி, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, பல்லடம், சூலூர், கோவை வடக்கு, சிங்காநல்லூர், கிணத்துக்கடவு, நிலக்கோட்டை, கிருஷ்ணராயபுரம், குளித்தலை,

மணப்பாறை, ஸ்ரீரங்கம், திருச்சி கிழக்கு, திருவெறும்பூர், துறையூர், பெரம்பலூர், கடலூர், கும்பகோணம், ககந்தர்வகோட்டை, காரைக்குடி, சிவகங்கை, மானாமதுரை, மதுரை கிழக்கு, சோழவந்தான், , மதுரை தெற்கு, மதுரை மேற்கு, திருப்பரங்குன்றம், உசிலம்பட்டி, பெரியகுளம், ஸ்ரீவில்லிப்புத்தூர், சிவகாசி, விருதுநகர், திருவாடானை, தூத்துக்குடி, ஒட்டப்பிடாரம் மற்றும் கோவில்பட்டி.

தமிழக சட்டப்பேரவை தேர்தலில், அஇஅதிமுக முன்னிலை பெற்றுள்ள தொகுதிகளின் விவரங்கள் -

திருத்தணி, மதுராந்தகம், ஆற்காடு, அணைக்கட்டு, ஜோலார்பேட்டை, பர்கூர், ஒசூர், பாலக்கோடு, பாப்பிரெட்டிபட்டி, அரூர், செங்கம், கீழ்பெண்ணாத்தூர், கலசப்பாக்கம், ஆரணி, மயிலம், கங்கவல்லி, ஆத்தூர், ஓமலூர், மேட்டூர், சங்ககிரி, தாராபுரம், காங்கேயம், பெருந்துறை, பவானி, அந்தியூர், தொண்டாமுத்தூர், பழநி, நத்தம், கரூர், லால்குடி, நெய்வேலி, பண்ருட்டி, புவனகிரி, விராலிமலை, சங்கரன்கோவில் மற்றும் கன்னியாகுமரி.

திமுக முன்னிலை பெற்றுள்ள தொகுதிகளின் விவரங்கள் -

சேப்பாக்கம் திருவல்லிக்கேணி, ஆம்பூர், வேப்பனஹள்ளி, திருவண்ணாமலை, வந்தவாசி, வானூர், விழுப்புரம், உளுந்தூர்பேட்டை, ரிஷிவந்தியம், சங்காராபுரம், பரமத்திவேலூர், கோவை தெற்கு, பொள்ளாச்சி, மடத்துக்குளம், ஒட்டன்சந்திரம், ஆத்தூர், திண்டுக்கல், வேடச்சந்தூர், அரவக்குறிச்சி, குன்னம், திட்டக்குடி, குறிஞ்சிப்பாடி, சிதம்பரம், சீர்காழி, பூம்புகார், நாகப்பட்டிணம், திருவிடைமருதூர், திருவையாறு, ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, பேராவூரணி, புதுக்கோட்டை, ஆலங்குடி, திருப்பத்தூர், திருமங்கலம், ஆண்டிப்பட்டி, போடி, கம்பம், சாத்தூர், அருப்புக்கோட்டை, திருச்சுழி, பரமக்குடி, ராமநாதபுரம், முதுகுளத்தூர், விளாத்திக்குளம், திருச்செந்தூர், வாசுதேவநல்லூர், கடையநல்லூர், தென்காசி ஆலங்குளம் மற்றும் நாகர்கோவில்.

சோளிங்கர், தருமபுரி, செஞ்சி, ஜெயங்கொண்டம், விக்கிரவாண்டி தொகுதிகளில் பாமக முன்னிலை பெற்றுள்ளது.

மார்ச்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கீழ்வேளூர், பத்மநாபபுரம் தொகுதிகளிலும் வி.சி.க., திண்டிவனம், காட்டுமன்னார் கோவில் தொகுதிகளிலும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் பாபநாசம் மற்றும் வாணியம்பாடி தொகுதிகளிலும், தேமுதிக விருதாசலம் தொகுதியிலும், அமமுக மன்னார்குடி தொகுதியிலும் முன்னிலை பெற்றுள்ளன.

இத்தேர்தலில் த.வெ.க. பெரும்பாலான இடங்களில் முன்னிலை வகித்து வருவதை அடுத்து, பனையூரில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் த.வெ.க-வினர் பட்டாசு வெடித்தும் இனிப்புகளை வழங்கியும் கொண்டாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

(சவுண்ட் பைட் - கொண்டாட்டம் 40 செகண்ட்ஸ்)

தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஐந்து சட்டப்பேரவை தொகுதிகளில் அஇஅதிமுக கூட்டணி 4 தொகுதிகளிலும், ஒரு தொகுதியில் த.வெ.க.வும் வெற்றிபெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - தண்டபாணி 60 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மேற்குவங்க சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் பிஜேபி வேட்பாளர்கள் பெரும்பாலான தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளனர்.

294 உறுப்பினர்களை கொண்ட அம்மாநில சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில், ஒரு தொகுதியில் மறு வாக்குப்பதிவு நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

எஞ்சிய 293 தொகுதிகளில் முன்னணி நிலவரங்கள் தெரியவந்துள்ளன.

இதன்படி, 27 தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ள பிஜேபி, 176 தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளது.

பெரும் பின்னடைவை சந்தித்துத்துள்ள ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் 9 தொகுதிகளில் வெற்றி பெற்று, 75 தொகுதிகளில் மட்டுமே முன்னிலை வகிக்கிறது.

காங்கிரஸ் 2 தொகுதிகளிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு தொகுதியிலும் முன்னிலை பெற்றுள்ளன.

அஸ்ஸாமிலும் பிஜேபி ஆட்சியை தக்க வைத்துக் கொண்டுள்ளது.

126 உறுப்பினர்களைக் கொண்ட அம்மாநில சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் 44 தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ள பிஜேபி 38 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.

காங்கிரஸ் ஒரு தொகுதியில் வெற்றிபெற்று, 18 தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளது.

கேரள சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சியை கைப்பற்றுகிறது.

140 உறுப்பினர்களைக் கொண்ட அம்மாநில சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் 127 தொகுதிகளுக்கான முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

13 தொகுதிகளில் முன்னிலை நிலவரங்கள் தெரியவந்துள்ளன.

இதில் 58 தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ள காங்கிரஸ், 5 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.

அதன் கூட்டணிக் கட்சியான இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 19 தொகுதிகளில் வெற்றிபெற்று 3 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 24 தொகுதிகளில் வெற்றிபெற்று 2 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 7 தொகுதிகளில் வெற்றிபெற்று ஒரு தொகுதியில் முன்னிலை வகிக்கிறது.

30 உறுப்பினர்களைக் கொண்ட புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலில் என்.ஆர். காங்கிரஸ் 9 தொகுதியில் வெற்றிபெற்று, 2 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.

பிஜேபி 2 தொகுதிகளில் வெற்றிபெற்று, 2 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.

திமுக 2 தொகுதிகளில் வெற்றிபெற்று, 3 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.

காங்கிரஸ் ஒரு தொகுதியில் வெற்றி பெற்றுள்ளது.

**>>>>><<<<<**

17 வயதுக்குபட்டோருக்கான ஆசிய குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் Rakhi, Ovi மற்றும் மம்தா இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

உஸ்பெகிஸ்தானின், தாஷ்கண்டில் நடைபெற்று வரும் இப்போட்டியின் முதல் சுற்று ஆட்டங்களில் இவர்கள் வெற்றிபெற்றனர்.

**>>>>><<<<<**

Tepesigeman செஸ் போட்டியின் இந்தியாவின் அர்ஜுன் எரிகைஸி 3வது சுற்றில் வெற்றிபெற்று, கூடுதல் புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறார்.

**>>>>><<<<<**

லண்டனில் நடைபெற்று உலக டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் மகளிர் பிரிவில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

**>>>>>END<<<<<**